# INFLUENCE OF MOTIVATIONAL PROGRAMS AMONG UNDERGRADUATES: WITH SPECIAL REFERENCE TO SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள் (Motivational Programs) பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ள செல்வாக்கு: இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தை மையப்படுத்திய ஒரு ஆய்வு

**M.A.F Ashfa[1], M.U.F Sahra[2], M.R.F Fasna[3], M.R.F Hasna[4] and M.S. Zunoomy[5]**

[1,2,3] Department of Islamic studies,
[4] Department of Geography,
[5] Department of Arabic Language,
South Eastern University of Sri Lanka, Sri Lanka

*ashfaansar6@gmail.com, zahra98.mail@gmail.com, faznadeen10@gmail.com hasnarazzak081@gmail.com, zunoomy@seu.ac.lk*

**ஆய்வுச்சுருக்கம்:** இன்றைய காலகட்டத்தில் அனைவருக்கும் ஏதோ ஒரு வகையில் வழிகாட்டி நிகழ்ச்சிகள் தேவைப்படுகின்றன. ஊக்குவிப்பானது நடத்தைகளை செயற்படுத்தும் காரணிகளை மாத்திரம் குறிக்காது. மாறாக இலக்கு நோக்கிய செயற்பாடுகளை இயக்குகின்ற, பராமரிக்கின்ற காரணியாகவும் காணப்படுகின்றது. ஒரு மனிதன் ஒரு காரியத்தை செய்வதற்கு அடிக்கடி ஊக்கப்படுத்தப்பட வேண்டிய தேவை உள்ளது. இதன்போது, அவர்கள் அக்காரியத்தை சிறப்பாக செய்வதற்கு இவ்வாறான ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளில் பங்கேற்கின்றனர். அவ்வகையில் பல்கலைக்கழக மாணவர்களிடையே மேற்கொள்ளப்பட்ட இவ் ஆய்வானது ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள் எவ்வாறு தாக்கம் செலுத்துகிறது என்பதை கண்டறிவதே இதன் நோக்கமாகும். இவ் ஆய்வு நோக்கத்தை அடைவதற்காக விவரிப்பு ஆய்வு முறையியல் பயன்படுத்தப்படுகின்றது. முதலாம் நிலை தரவுகள் வினாக்கொத்து, கலந்துரையாடல், அவதானம் ஆகியவற்றின் மூலம் பெறப்பட்டன. இங்கு வினாக்கொத்தானது எழுமாதிரியாக தெரிவு செய்யப்பட்ட இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவ, மாணவிகள் 250 பேருக்கு வழங்கப்பட்டன அவற்றுள் 200 வினாக்கொத்துக்கள் கிடைக்கப் பெற்றன. இரண்டாம் நிலை தரவுகள் ஆய்வுக்கட்டுரைகள், சஞ்சிகைகள் மற்றும் இணைய கட்டுரைகள் போன்றவற்றிலிருந்து பெறப்பட்டன. சேகரிக்கப்பட்ட தரவுகள் MS Excel மூலம் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களை மையப்படுத்திய இவ்வாய்வில் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள் அதிகமாக நடைபெற்று உள்ளதோடு அதிகமான மாணவர்கள் அதில் உச்ச பயனைப் பெற்றுக் கொண்டுள்ளனர் என்பதையும் கண்டறிய முடியுமாக உள்ளது. அத்தோடு இவ்வாறான ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளின் மூலம் மாணவர்கள் தமது கல்வியை விருத்தி செய்வதாகவும் அவர்களின் இலக்கை நோக்கிய பயணத்திற்கு வழிகோலுவதாகவும் அமைந்துள்ளமை இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இவ்வகையில், ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களிடையே ஏற்படுத்திய தாக்கமானது ஒரு இலக்கை நோக்கிய பயணத்தை காட்டக்கூடிய ஒரு சாதகமான விளைவாகவே அமையப் பெற்றுள்ளது என்பதை இவ்வாய்வு மூலம் அடையாளப்படுத்த முடிகிறது.

**திறவுச்சொற்கள்:** ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள், பல்கலைக்கழக மாணவர்கள், தாக்கங்கள்

## 1. அறிமுகம்

ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள் அன்றைய காலங்கள் போல் அல்லாது இன்று மிக முக்கிய ஒரு சாதனமாக காணப்படுகின்றன. Motivation என்ற சொல்லானது movere என்ற லத்தீன்

மொழிச் சொல்லிலிருந்து தோற்றம் பெற்றுள்ளது. இதன் பொருள் to move அதாவது நகருதல் அல்லது நகர்த்துதல் என பொருள்படும். அதாவது ஊக்குவிப்பு என்பது ஒரு விடயத்தை தூண்டுவதாகவும், ஒரு வழிகாட்டியாகவும், வெவ்வேறு சூழலில் எவ்வாறு நடக்க வேண்டும் என அறிவுரை வழங்குவதாகவே அமைகின்றது. இவ் ஊக்குவிப்பு சம்பந்தமாக ஆய்வாளர்களிடையே பல்வேறு கருத்துக்கள், வரைவிலக்கணங்கள் காணப்படுகின்றன. அவ்வகையில் பொதுவாக, அழவளையவழைெ என்பது நோக்கம் அல்லது உந்துதல் மற்றும் செயல்களின் ஒருங்கிணைப்பு எனக்கருதலாம். உந்துதல் என்பது ஒரு தனிப்பட்ட நடத்தையின் திசை மற்றும் நிலைத் தன்மையை விளக்கும் சுயாதீனமான மற்ற தன்மைகளுடன் தொடர்புடையது என Campbell and Pritchard என்பவர் வரையறுத்துள்ளார் (Stantey, 2011). அத்தோடு ஊக்குவிப்பு என்பது தன்னார்வு நடவடிக்கைகளின் மாற்று வடிவங்களில் தனிநபர்களை ஈடுபடுத்தும் செயன்முறை என Voorm என்பவர் கூறியுள்ளார் (Stanely, 2011). அதேவேளை ஊக்குவிப்பு என்பது மனிதனின் நடத்தையை இயக்கும், உற்சாகப்படுத்தும் காரணியாகும் (Feldman) என்பவர் கூறியுள்ளார் (Hasan Sagar 2011). இவ்வாறு பல்வேறு ஆய்வாளர்களிடையே பல்வேறு கருத்துக்கள் நிலவி வருகின்றன. இருப்பினும் இவ்வாறான அனைத்து கருத்துக்களும் தனிநபரின் உற்சாகப்படுத்துதல் என்பதில் ஒருங்கிணைகின்றது. இன்று இருக்கும் இவ் ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள் (Motivational programs) பாடசாலை மாணவர்கள் முதல் பணிபுரியும் ஊழியர்கள், முதியோர் வரை செல்வாக்கு செலுத்தும் ஒரு விடயமாக காணப்படுகின்றது. இதில் மாணவர்களை ஊக்கப்படுத்துவது என்பது மிகவும் சிரமமான ஒரு காரியமாகும். ஊக்கம் இல்லாத மாணவர்கள் திறன்பட கற்க மாட்டார்கள். அவர்கள் தகவல்களை தன் மனதில் தக்கவைக்க மாட்டார்கள். அவர்கள் பல்வேறு விடயங்களிலும் பங்கேற்க மாட்டார்கள். ஒரு மாணவன் பல்வேறு காரணங்களுக்காக ஊக்கமில்லாமல் இருக்கலாம். அவர்கள் தான் தெரிவு செய்த பாடத்தில் ஆர்வம் இல்லை என நினைக்கலாம். ஆசிரியர்கள், விரிவுரையாளர்களின் கற்பித்தல் முறைகளில் ஈடுபாடு இல்லாது வெளிப்புற சக்திகளால் திசை திருப்பப்படலாம். எனவே மாணவர்களை எவ்வாறு ஊக்கப்படுத்த வேண்டும் என்பதைக் கற்றுக்கொள்வது மிகவும் முக்கியமான ஒன்றாகும். ஊக்குவிப்பானது அதிக முயற்சி மற்றும் ஆற்றலுக்கு வழிவகுக்கிறது. ஒரு மாணவன் ஒரு பணியை (கடினமான ஒன்றைக் கூட) ஆர்வத்துடன் அல்லது மந்தமான மனப்பான்மையுடன் தொடர்வாரா? என்பதை ஊக்குவிப்பு தீர்மானிக்கிறது. இவ்வாறான ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளானது (Motivational programs) எதிர்காலத்தைப் பற்றி நம்பிக்கை ஊட்டக்கூடியதாகவும், மன அமைதியை பெறும் நோக்கிலும், கல்வி நடவடிக்கைகளை விருத்தி செய்யும் நோக்கிலும், தடைகளை தகர்த்தெறியும் ஒரு சிறந்த பாடத் துறையை தெரிவு செய்யும் நோக்கிலும் பாரிய அளவில் நடைபெற்று வருகிறது. இதன் மூலம் தத்தமது தேவைகளையும் அபிலாசைகளையும் நோக்கங்களையும் அடைந்து கொள்வதற்கு இந்த நிகழ்ச்சிகள் பாரிய பங்களிப்பை வழங்குகின்றது. மனிதர்களிடையே காணப்படும் எதிர்மறையான உணர்வுகளை எதிர்த்துப் போராடி அதில் வெற்றி கொள்ளக்கூடிய திறனை இந்நிகழ்ச்சிகள் வழங்குகின்றன. அத்தோடு ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளானது (Motivational programs) கல்வி சம்பந்தப்பட்டதாக, தொழில் சம்பந்தப்பட்டதாக, சமூக நிலைமைகளை கூறக்கூடியதாக என பல்வேறு வகைகளில் உள்ளன.

## 2. ஆய்வு பிரச்சினை

இன்றைய இருபத்தோராம் நூற்றாண்டில் உலகமானது மிக வேகமாக முன்னேறிக் கொண்டு வருகிறது. கல்வியானது எல்லாத் துறைகளிலும் தனது இடத்தை பிடித்துக் கொண்டுள்ள இக்காலகட்டத்தில் ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளானது அதிகமானோரால் மேற்கொள்ளப்படுவதோடு மக்கள் மத்தியிலும் இது பாரிய மாற்றங்களை கொண்டு வந்துள்ளது. அந்தவகையில் ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளானது செல்வாக்கு பெற்றுள்ளது. இந்தவகையில் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளானது எவ்வாறு செல்வாக்கு பெற்றுள்ளது? எனும் வினாவே ஆய்வு பிரச்சினையாக எடுத்துக் கொள்ளப்பட்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

## 3. ஆய்வு நோக்கங்கள்

ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள் பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் செல்வாக்கு பெற்றுள்ளதா என்பதை கண்டறிதல்.

## 4. ஆய்வு முக்கியத்துவம்

இன்றைய நவீன யுகத்தில் மனிதன் பலவாறான பிரச்சினைகளை எதிர்நோக்குவதுடன், அதனை எவ்வாறு தீர்க்க முடியும் என்று சிந்தித்த வண்ணம் உள்ளான். அந்தவகையில் மனிதன் அவனுடைய வாழ்வில் ஒரு சிறந்த இலக்கை நோக்கி பயணிக்க, மன அழுத்தத்தை

குறைப்பதற்காக, வாழ்வை சரியான பாதையில் இட்டுச் செல்ல என பல சிக்கல்களைத் தீர்க்க முயற்சி செய்கின்றான். மனிதனுடைய அனைத்து நடத்தைகளுக்கும் நல்வாழ்வுக்கும் மற்றும் மகிழ்ச்சிக்கும் வழிகாட்டும் உந்து சக்தியாக ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள் காணப்படுகின்றன. இதனடிப்படையில், இவ்வாய்வானது மாணவர்களை கல்வி ரீதியாக அவர்களின் சுயசிந்தனையை விருத்தி செய்வதற்கு, ஒரு இலக்கை நோக்கி இட்டுச் செல்வதற்கு துணைபுரியும் என்றவகையில் முக்கியத்துவம் பெறுகிறது.

## 5. ஆய்வு முறையியல்

இவ் ஆய்வானது தரம்சார், பண்புசார் முறைமையின் கீழ் விபரிப்பு ஆய்வு முறையியலை பயன்படுத்துகின்றது. முதலாம் நிலை தரவுகள் வினாக்கொத்து, கலந்துரையாடல், அவதானம் ஆகியவற்றின் மூலம் பெறப்பட்டன. இங்கு வினாக்கொத்தானது எழுமாதிரியாக தெரிவு செய்யப்பட்ட இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவ, மாணவிகள் 250 பேருக்கு வழங்கப்பட்டன அவற்றுள் 200 வினாக்கொத்துக்கள் கிடைக்கப் பெற்றன. இரண்டாம் நிலை தரவுகள் ஆய்வுக்கட்டுரைகள், சஞ்சிகைகள் மற்றும் இணைய கட்டுரைகள் போன்றவற்றிலிருந்து பெறப்பட்டன. சேகரிக்கப்பட்ட தரவுகள் MS Excel மூலம் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

## 6. இலக்கிய மீளாய்வும் ஆய்வு இடைவெளியும்

ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்திய தாக்கங்கள் தொடர்பான நேரடியான ஆய்வுகள் எதுவும் கண்டறியப்படவில்லை. ஆயினும் ஆங்கில மொழி ஆசிரியர்களிடையே ஊக்குவிப்பு, பல்கலைக்கழக மாணவர்களிடம் காணப்படும் ஊக்குவிப்பு கூறுகள், தனியார் துறை ஊழியர்களின் ஊக்குவிப்பு, தொழில் செய்ய முனைவோருக்கு ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள் போன்றன தொடர்பாக பல ஆய்வுகள் மற்றும் கட்டுரைகள் என்பன மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1. Journal of Language Teaching and Research - 2013 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட Sujeewa Hettiarachchi என்பவரால் ஆய்வு செய்யப்பட்ட English Language Teacher Motivation in Sri Lankan Public Schools எனும் ஆய்வானது, இலங்கை ஆங்கில மொழி ஆசிரியர்களிடையே ஊக்குவிப்பு அம்சங்கள் பற்றி ஆராயப்பட்டுள்ளதுடன் ஆங்கில ஆசிரியர்கள் ஊக்குவிக்கபடுவதன் சாதகமான விளைவுகள் மற்றும் demotivates இன் செயற்பாடுகள் மாணவர்களின் அடைவுகள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. Cloud state University - 2015 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட P.W. Warshani Himanshi என்பவரால் ஆய்வு செய்யப்பட்ட A Study of Second Language Identity and Motivation Among Undergraduates In Sri Lankan Universities ஆய்வில் பல்கலைக்கழக மாணவர்களிடையே ஆங்கிலம் கற்பது குறைவாக உள்ளது என்பதை ஆராய்கின்றது. இலங்கையில் காணப்படும் அரச நிதி உதவி பெறும் பல்கலைக்கழகங்களில் உள்ள இளம் பட்டதாரிகளிடம் ஊக்குவிப்பு கூறுகள் உள்ளதா என்பது மதிப்பிட்டு ஆராயப்பட்டுள்ளது.

3. 4th interdisciplinary conference of management research sabragamuwa University - 2019 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட Dharmadasa R.A.P.I.S., Tharika A.K.M., Fernando P.M.M., Samaraweera W.G.R.L. ஆகியோரால் ஆய்வு செய்யப்பட்ட Department of Employee Motivation: A Case Study Of A Reputed Organization's Executive Staff In Sri Lanka எனும் ஆய்வானது, இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட அமைப்புகளில் வேலைவாய்ப்பு ஊக்கப்படுத்தலின் வரையறைகள் பற்றி குறிப்பிடுகின்றது. நிர்வாக ஊழியர்களிடையே பணியாளர்களை ஊக்குவிக்கவும், இயக்கிகளை அடையாளம் காணவும், நிறுவனர் மற்றும் மக்கள் தொகை காரணிகளை ஆராயவும் இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வின் ஊடாக ஊழியர்களை மேம்படுத்தல் மற்றும் ஊக்கப்படுத்தல் அளவு என்பவற்றை தீர்மானிக்கும் காரணிகளாக வயது, பால், மேலதிக வருமானம், ஊழியர்களின் இடைத்தொடர்பு போன்றன கருத்திற் கொள்ளப்பட்டுள்ளன.

4. Velnamphy. T என்பவரால் வெளியிடப்பட்ட Job Satisfaction and Employee Motivation: An Empirical Study Of Sri Lankan Organization's 2019 எனும் ஆய்வானது, இலங்கை அமைப்புகளில் வேலை திருப்தி மற்றும் ஊழியர் ஊக்குவிப்பு பற்றிய ஓர் அனுபவ ஆய்வாக காணப்படுகிறது. திருப்தி, ஊக்குவிப்பு என்ற இரண்டு விடயங்களும் ஒன்றை ஒன்று தொடர்புடையதாக காணப்படுவதுடன் ஒரு அமைப்பினுள் காணப்படும்

பணிப்பாளர்களுக்கு ஏனைய காரணிகளை விட பொருளாதாரக் காரணிகளே முக்கியம் என்பதை இவ்வாய்வு சுட்டி நிற்கிறது.

5. SEUSL Journal of Marketing 2020 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட Yasoda V.G.K., Chalika P.H.A.N., Silva D.A.C ஆகியோரால் ஆய்வு செய்யப்பட்ட Analysing The Motivational Factors of Homestay Entrepreneurs: A Case Study of Bentota Destination Site Sri Lanka எனும் ஆய்வானது, வீட்டிலிருந்து தொழில் செய்ய முனைவோருக்கு உள்ளார்ந்த ரீதியான தாக்கங்கள் மற்றும் வெளிவாரி ரீதியான தாக்கங்களும் ஏற்படுகிறது என்பதை தெளிவுபடுத்துகின்றது.

6. Velnamphy. T என்பவரால் வெளியிடப்பட்ட Rewards and Employee Motivation ( A Study of Private Sectors Organizations In Sri Lanka) 2009 எனும் ஆய்வானது, தனியார் துறை அமைப்புகளில் ஊழியர்களின் ஊக்குவிப்பு மற்றும் வெகுமதிகள் பற்றியதாகும். வெகுமதிகளும் ஊக்குவிப்பும் தனியார் துறை ஊழியர்கள் இடையே பெரும் பங்கை வகிக்கின்றது எனவும் பண வெகுமதிகளை விட ஊக்குவிப்புகள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்றும் இவ்வாய்வின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

7. Kumarasinghe W.H.K என்பவரால் வெளியிடப்பட்ட Factors Influencing Employee Motivation: A Case Study In Ceramic Tile Manufacturing Industry In Sri Lanka 2020 எனும் ஆய்வானது, ஊக்குவிப்பு நிகழ்ச்சியானது ஒரு நிறுவனத்தில் உள்ள பணிப்பாளர்களுக்கும் அந்நிறுவனத்தின் முகாமை குழுவினருக்கும் தனிப்பட்ட முறையிலும், தொழில் ரீதியாகவும் சாதக விளைவுகளை ஏற்படுத்தும் என கண்டறியப்பட்டுள்ளது.

8. Journal of language teaching and research 2013 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட Sujeewa.H என்பவரால் ஆய்வு செய்யப்பட்ட ESL Teacher Motivation In Sri Lankan Public Schools எனும் ஆய்வில், மாணவர்களுக்கு கற்பிக்கும் செயல் மற்றும் மதிப்புமிக்க சமூகத்தை வெளிக்காட்டியது. இலங்கையில் ஆசிரியர் இடமாற்றங்கள், ஆங்கிலப் பாடத்தில் மாணவர்கள் விருப்பமின்மை போன்ற முக்கிய பிரச்சினையாக கண்டறியப்பட்டன.

9. Sabragamuwa University journal -2018 இல் வெளியிடப்பட்ட Prasangani, K. S. N என்பவரால் ஆய்வு செய்யப்பட்ட Investigation of L2 Motivational Self System : A Comparative Study of Undergraduates From Displaced and Resettled Regions In Sri Lanka எனும் ஆய்வானது, இலங்கையில் இரண்டாம் மொழி (L2) ஊக்க நிகழ்ச்சி சுய அமைப்பின் அடிப்படையில் பாதிக்கப்பட்ட சமூகங்களில் L2 இளங்கலை பட்டதாரிகளின் ஊக்கப்படுத்தல் சுயவிவரத்தை பற்றி ஆராய்கிறது. இது கிராமப்புற மற்றும் போரில் பாதிக்கப்பட்ட இலங்கை பட்டதாரிகளின் கற்றலுக்கு இரண்டாம் மொழி ஆங்கிலமானது வலுவானதாக நிறுவப்பட்டது என்றும் அவர்களின் பாதகமான நிலைகளை சிறந்த முறையில் கொண்டு ஆங்கில கற்றலை கற்க காரணமாக ஊக்கப்படுத்தல் அமையும் எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது.


10. International Journal Of Research -2017 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட Anthony Andrew என்பவரால் ஆய்வு செய்யப்பட்ட Study On The Motivation For Undergraduates To Become Entrepreneur Empirical Evidence From Eastern University Sri Lanka எனும் ஆய்வானது, தொழில் செய்ய முனைவோருக்கு ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள் வழங்குவதன் மூலம் அவர்கள் சுய வேலை வாய்ப்பை தொடங்குவார்களாயின் இது அவர்களுக்கு மட்டுமின்றி நாட்டிற்கும் சாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என கண்டறியப்பட்டுள்ளது.

மேற்படி தலைப்புக்களில் ஆய்வுகள் செய்யப்பட்டிருந்தாலும் ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள் பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்திய தாக்கங்கள் பற்றி ஆராய்வது ஆய்வு இடைவெளியை பூரணப்படுத்துவதாக அமைகின்றது.

## 7. தரவு பகுப்பாய்வும் கலந்துரையாடலும்


ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளானது ஆரம்ப காலங்களை போலல்லாது இன்று மிக முக்கிய ஒரு விடயமாக வளர்ந்து வருகின்றது. ஒரு மனிதனுடைய அனைத்து நடத்தைகளும் நல்வாழ்க்கைக்கும் மகிழ்ச்சிக்கும் வழிகாட்டக் கூடியதாக ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள் காணப்படுகிறன.

இவ் ஆய்வுக்காக 250 வினாக்கொத்துக்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. அவற்றுள் 200 வினாக்கொத்துக்கள் கிடைக்கப் பெற்றன. அவற்றில் 54.9 சதவீதமானோர் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழி பீடத்தை சேர்ந்தவர்களும், 36.4 சதவீதமானோர் கலை மற்றும் கலாசார பீடத்தை சேர்ந்தவர்களும், 7.2 சதவீதமானோர் முகாமைத்துவப் பீடத்தை சேர்ந்தவர்களும் 1.5 சதவீதமானோர் பிரயோக விஞ்ஞான பீடத்தில் சேர்ந்த மாணவர்களுமே இவ்வினாக்கொத்தினை பூரணப்படுத்தி இருந்தனர். இதனை வரைபு (1) காட்டுகின்றது.





வரைபு 1. பீட மாணவர்கள்

வினாக்கொத்தைப் பூரணப்படுத்தியவர்களுள் 57.4 சதவீதமானோர் முதலாம் வருட மாணவர்களும் 25.9 சதவீதமானோர் மூன்றாம் வருட மாணவர்களும் 9.6 சதவீதமானோர் நான்காம் வருட மாணவர்களும் 7.1 சதவீதமானோர் இரண்டாம் வருட மாணவர்களுமாவர். இதனை கீழுள்ள வரைபு (2) காட்டுகின்றது.





வரைபு 2. வருடம்

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களில் இதுவரை ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளில் பங்குபற்றியவர்கள் 85.4 சதவீதமானோரும் பங்குபற்றாதவர்கள் 14.6 சதவீதத்தினர் ஆவர். இதனை வரைபு (3) விபரிக்கின்றது.





வரைபு 3. ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளில் பங்குபற்றியவர்கள்

அவ்வாறே, இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவ, மாணவிகளில் இவ்வினாக்கொத்தை பூரணப்படுத்தியவர்களுள் 85.9 சதவீதத்தினர் ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளை (motivational programs) விரும்பக் கூடியவர்களாகவும் 14.1 சதவீதத்தினர் ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளை (Motivational programs) விரும்பாதவர்களாகவும் காணப்பட்டனர். இதனை வரைபு (4) காட்டுகின்றது.





வரைபு 4. ஊக்குவிப்பு நிகழ்ச்சியிலுள்ள விருப்பம்

ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளில் பங்குபற்றிய மாணவர்களுள் 63.2 சதவீதத்தினர் 1-3 வரையான எண்ணிக்கையிலான ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளில் பங்கு பற்றியவர்களாகவும் 20.3 சதவீதத்தினர் 6 மேற்பட்ட ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளிலும் 16.5 சதவீதத்தினர் 4-6 வரையிலான ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றியுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளனர். இதனை கீழுள்ள வரைபு (5) விபரிக்கின்றது.





வரைபு 5. ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளில் பங்குபற்றிய எண்ணிக்கை

அதேவேளை, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவ மாணவர்களிடம் ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள் மூலம் அவர்கள் எதிர்பார்ப்பது தொடர்பான கருத்து கணிப்பு மேற்கொள்ளப்பட்ட போது கல்வித் தகைமையை விருத்தி செய்ய, சுய மதிப்பீடுகளை மேற்கொள்ள, தொழில்வாண்மையை விருத்தி செய்ய, நேர முகாமைத்துவத்திற்கு, பொழுது போக்கு அம்சங்களுக்கு என்ற கருத்துக்களை மாணவர்கள் அடையாளப்படுத்தியுள்ளனர். இதனை கீழுள்ள வரைபு (6) விபரித்து காட்டுகின்றது.





வரைபு 6. ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள் மூலம் எதிர்பார்க்கப்படுபவை

பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் பயன்படுத்தப்படும் மொழி தொடர்பாக நோக்குவோமேயானால், பொதுவாக மாணவர்கள் தங்களது தாய் மொழியினையே அதிகம் விரும்புவர். அந்த அடிப்படையில் இவ்வாய்வினை பொறுத்தவரையில் ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளானது தமிழ் மொழியில் நடத்தப்படுவதையே இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தை சேர்ந்த அதிகமானோர் விரும்புகின்றனர். அதாவது 92 சதவீதமானோர் தமிழ் மொழியிலும் 8 சதவீதமானோர் ஆங்கில மொழியிலும் ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்படுவதை விரும்புகின்றனர். இதனை கீழுள்ள வரைபு (7) விபரிக்கின்றது.




வரைபு 7. விரும்பும் மொழி


அதேபோல, இவ்வினாக்கொத்தில் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தை சேர்ந்த மாணவ, மாணவிகளிடத்தில் அவர்கள் இதுவரை பங்குபற்றிய ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள் அவர்களுக்கு எவ்வாறு இருந்தது என்ற வினாவிற்கு அதிகமானவர்கள் அதாவது 68.4 சதவீதமானோர் தனக்கு திருப்தியாக இருந்தது என்றும் 31.6 சதவீதமானோர் தமக்கு ஓரளவு திருப்தியாக இருந்தது என்றும் கூறியிருந்தனர். திருப்தியாக இருக்கவில்லை என்று எவரும் குறிப்பிடவில்லை. இதனை கீழுள்ள வரைபு (8) விபரிக்கின்றது.




வரைபு 8. திருப்தி நிலை


அவ்வாறே நீங்கள் ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதற்கான காரணம் என்ன என்பதற்கு சிறந்த வாழ்க்கை அமைப்பு ஒன்றை புரிந்து கொள்வதற்கு, ஒரு சிறந்த துறையை தெரிவு செய்வதற்கு, கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்த, மன அமைதியை பெற, நவீன தொழில்நுட்பங்களை அறிந்து கொள்ளல் போன்ற பல கருத்துக்களை

முன்வைத்திருந்தனர். இதில் சிறந்த வாழ்க்கை அமைப்பு ஒன்றை புரிந்துகொள்ள என்பதே அநேகமானோருடைய பதிலாக இருந்தது. இதனை கீழுள்ள வரைபு (9) விவரிக்கின்றது.




வரைபு 9. ஊக்குவிப்பு நிகழ்ச்சியில் பங்குபற்றுவதற்கான காரணங்கள்


இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக பாடதிட்டத்தில் ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள் தொடர்பான பாட திட்டம் ஒன்றை அறிமுகம் செய்ய மாணவ, மாணவிகளுக்கு விருப்பமா? இல்லையா? என்ற வினா வினவப்பட்ட போது 97 சதவீதமான மாணவர்கள் விரும்புவதாகவும் 3 சதவீதமான மாணவர்கள் தமக்கு விருப்பம் இல்லை என்றும் கருத்து முன்வைத்தனர். இதனை கீழுள்ள வரைபு (10) விவரிக்கின்றது.




வரைபு 10. பாடத்திட்ட உருவாக்கம்


அதேபோல, ஊக்குவிப்பு நிகிழ்ச்சிகள் பல்கலைக்கழக நடவடிக்கைகளில் பங்களித்துள்ளதா? இல்லையா? எனும் வினா தொடுக்கப்பட்ட போது 70.2 சதவீதமானோர் பங்களித்துள்ளதாகவும் 25.7 சதவீதமானோர் ஓரளவு பங்களித்துள்ளதாகவும் 4.1

சதவீதமானோர் எவ்வித பங்களிப்பும் கிடைக்கவில்லை என்றும் குறிப்பிட்டிருந்தனர். இதனை வரைபு (11) காட்டுகின்றது.





வரைபு 11. பங்களிப்பு தொடர்பானது

அந்தவகையில், பல்கலைக்கழக நடவடிக்கைகளில் எவ்வாறான விடயங்களில் ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள் பங்களிப்பு செய்துள்ளது என்று வினவப்பட்ட போது ஒரு இலக்கை நோக்கிப் பயணிக்க உதவியது, கல்வியை ஆர்வத்துடன் கற்க விருப்பம் ஏற்பட்டது, நேரத்தை முகாமைத்துவம் செய்து கொள்ள முடியுமாக இருந்தது, சுய சிந்தனையை மேம்படுத்த முடியுமாக இருந்தது என்று குறிப்பிட்டிருந்தனர். வரைபு (12) இதனை விபரிக்கின்றது.





வரைபு 12. பங்களிப்பு செய்த விடயங்கள்

அவ்வாறே, ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளின் பின்னர் உங்களில் ஏதாவது மாற்றங்களை கொண்டு வர வேண்டும் என எண்ணியுள்ளீரா? என்று வினவப்பட்ட போது 91.2 சதவீதமானோர் ஆம் என்றும் 8.8 சதவீதமானோர் இல்லை என்றும் பதிலளித்தனர். அந்த வகையில் அநேக மாணவர்கள் தங்களில் மாற்றங்களை கொண்டு வரவே எண்ணி இருந்தனர். இதனை கீழுள்ள வரைபு (13) காட்டுகின்றது.




வரைபு 13. மாற்றத்தை ஏற்படுத்தல்


ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள் மூலம் தங்களில் எவ்வாறான மாற்றங்களை கொண்டு வந்துள்ளீர்கள் என்று வினவப்பட்ட போது நேரத்தை திட்டமிட கற்றுக் கொண்டேன், சரியான துறையை தேர்ந்தெடுக்க கற்றுக் கொண்டேன், பிரச்சினைகளை இலகுவான முறையில் தீர்க்கக் கற்றுக் கொண்டேன், மன அமைதியைப் பெற்றுக் கொண்டேன், வாழ்க்கையை எவ்வாறான நோக்கத்தோடு கொண்டு செல்ல வேண்டும் என்பதை அறிந்து கொண்டேன் போன்ற பல மாற்றங்களை குறிப்பிட்டனர். இதனை கீழுள்ள வரைபு (14) விபரிக்கின்றது.




வரைபு 14. ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள்


அதேபோல, ஊக்குவிப்பு நிகழ்ச்சி ஒன்று எவ்வாறு இருக்க வேண்டும்? என்ற வினா தொடுக்கப்பட்ட போது நகைச்சுவையுடன் கருத்து நிறைந்ததாக இருக்க வேண்டும், எமது

அன்றாட வாழ்க்கைக்கு உகந்ததாக இருக்க வேண்டும், பட விளக்கத்துடன், Presentation செய்யும் முறையில் இருக்க வேண்டும், மிகவும் சுவாரஸ்யமாக இருத்தல் வேண்டும் என தங்களது கருத்துக்களை முன்வைத்திருந்தனர். இதனை கீழுள்ள வரைபு (15) விவரிக்கின்றது.




வரைபு 15. ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளின் தன்மை

இத்தொடரில் ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள் உமது எதிர்காலத்திற்கு அல்லது தற்கால நடவடிக்கைகளுக்கு மிக முக்கியமான ஒன்றாக கருதுகின்றீரா? என்ற வினா தொடுக்கப்பட்ட போது 70.9 சதவீதமானோர் முழுமையாக கருதுவதாகவும் 24 சதவீதமானோர் ஓரளவு கருதுவதாகவும் 5.1 சதவீதமானோர் நடுநிலை என்று பதிலளித்தனர். இதனை கீழுள்ள வரைபு (16) காட்டுகின்றது.




வரைபு 16. ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளின் தேவை

ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள் பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் பல்வேறு பங்களிப்பை வழங்கியுள்ளன. அவ்வகையில் ஒரு குறித்த இலக்கை நிர்ணயித்து அதை நோக்கி பயணிக்க துணை புரிந்தன. கல்வியை ஆர்வத்துடன் கற்க விருப்பம் ஏற்பட்டது, சுய சிந்தனை திறனை விருத்தி செய்ய முடியுமாக இருந்தது, நேரத்தை சரியாக திட்டமிட்டு முகாமை செய்ய இயலுமாக இருந்தது, பிரச்சினைகளின் போது அதை எவ்வாறு தீர்க்கலாம் என அறிய முடியுமாக இருந்தது போன்ற பல பங்களிப்பை வழங்கியதுடன் இவ்வாறான

மாற்றங்களையும் தம்முள் கொண்டு வந்து அவர்களுடைய வாழ்க்கைப் பாதையை சீராக அமைத்துக் கொண்டுள்ளனர்.

## 8. முடிவுரையும் பரிந்துரையும்

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களிடையே ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளில் பங்குபற்றியவர் தொடர்பான விடயங்களை ஆய்வுக்குட்படுத்திய இவ்வாய்வானது, ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள் அதிகமாக பல்கலைக்கழக மாணவர்களிடையே நடைபெற்றுள்ளமையை கண்டறிந்துள்ளது. பெரும்பாலான மாணவர்கள் இவ்வாறான நிகழ்ச்சிகளில் பங்குபற்றியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. அத்தோடு இவ்வாறான ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள் மூலம் மாணவர்கள் எதிர்பார்ப்பது அவர்களது கல்வித் தகைமையை விருத்தி செய்வதும், தொழில்வாண்மை விருத்தியும், சுய மதிப்பீடுகளை மேற்கொள்வதற்குமாகவே என பெரும்பாலானோரின் பதிவில் இருந்து அறிய முடிகிறது. மேலும் இவ்வாறான ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள் தமக்கு விருத்தியைத் தந்ததாக பெரும்பாலான மாணவர்கள் கூறியுள்ளனர். அதேவேளை, ஒரு சிறந்த வாழ்க்கை அமைப்பொன்றை புரிந்து கொள்ளவே இவ்வாறான ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளில் மாணவர்கள் பங்குபற்றுவதாக பெரும்பாலான மாணவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இவ்வாறான ஊக்குவிப்பு சம்பந்தமான பாடத்திட்டத்தை பல்கலைக்கழகத்தில் அறிமுகப்படுத்துவதே பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஒரு உந்து சக்தியாக காணப்படும் என அதிகமான மாணவர்கள் கூறியுள்ளனர். ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளானது மாணவர்களின் பல்கலைக்கழக நடவடிக்கைகளில் பெரும்பாலான மாணவர்களுக்கு பங்களித்துள்ளது என்பதை இவ்வாய்வுத் தரவுகளினூடாக அறியக்கூடியதாக உள்ளது. அதேவேளை ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள் மூலம் மாணவர்கள் தங்கள் வாழ்க்கையை எவ்வாறான நோக்கத்தோடு கொண்டு செல்ல வேண்டும், நேரத்தை திட்டமிட கற்றுக் கொண்டமை, பிரச்சினைகளை இலகுவான முறையில் தீர்க்க அறிந்து கொண்டமை, சரியான துறையை தேர்ந்தெடுக்க அறிந்து கொண்டமை என பல்வேறு மாற்றங்களை தமக்குள் கொண்டு வந்துள்ளதை இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. மேலும், இவ்வாறான ஊக்குவிப்பு நிகழ்ச்சியானது பாட விளக்கமாக மாத்திரம் அமையாமல் நகைச்சுவையுடன் சேர்ந்து கருத்து நிறைந்ததாக அமைய வேண்டும் என்பது அதிகமான மாணவர்களின் கருத்தாக இருந்தது. அதேவேளை, ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளானது எதிர்கால நடவடிக்கைகளுக்கு மாத்திரமன்றி தற்கால நடவடிக்கைகளுக்கு மிக முக்கிய ஒரு விடயமாக இருப்பதை பெரும்பாலான மாணவர்கள் முழுமையாக ஏற்றுக் கொண்டுள்ளனர்.

அதேநேரம், இவ்வாறான ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளை பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் நடத்தி மாணவர்களது தூரநோக்கு சிந்தனையை விருத்தி செய்து இளம் தலைமுறையினரது எதிர்காலத்தை சிறப்பாக திட்டமிட்டுக் கொண்டு செல்வதற்கும் இவ்வாறான பல்வேறு நிகழ்ச்சிகளை மிகவும் சுவாரஸ்யமான முறையில் நகைச்சுவையுடன் கருத்து நிறைந்த நிகழ்ச்சிகளை நடத்துவதற்கும் இவ்வாறான ஊக்குவிப்பு சம்பந்தப்பட்ட பாடத்திட்டத்தை பல்கலைக்கழகத்தில் அறிமுகப்படுத்துவதற்கு இவ்வாய்வு பரிந்துரை செய்கிறது.

## REFERENCE

Andrew. A., (2017*), study on the motivation for undergraduates to become entrepreneur empirical evidence from eastern university srilanka.* Research gate, article in international journal of research: November 2017.

Dharmadasa.R.A.P.I.S., Tharika.A.K.M., Fernando.P.M.M., Samaraweera., W.G.R.L., (2019), *Determinants of Employee motivation: A case study of a reputed organization's executive staff in Srilanka.* 4th inder disciplinary conference of management researchers, Department of export agriculture, uva wellassa University, Badulla, Srilanka.

Hettiarachchi.S., (2013), English language teacher motivation in Srilankan public schools. *Journal of language teaching and research*, vol.4,No.1,PP.1-11,doi:10.4304/jltr.4.1.1-11.

Hettiarachchi.S., (2013*),* ESL Teacher motivation in Srilankan public schools. *Journal of language teaching and research*, doi:10.4304/jltr.4.1.1-11.

Himanshi. P.W.W.,(2015*), A study of second language identity and motivation among undergraduates in Srilankan universities.* Cloud state university, The repository at.st. cloud state. https://respository.stcloudstate.edu/engl-etds.

Kerestesove.M., (2009), *The motivational program as an important and essential part of each organization in the battle for the rerest capital - the human potential.* Human resources management & ergonomics, volume 3.

Kumarasinghe.W.H.K., (2012*), Factors influencing employee motivation: A case study in ceramic tile manufacturing industry in Srilanka*. Master of business administration in project management.

Pohankova.A., (2009), *Motivation program as basis for successful motivating in the organization.* Human resources management & ergonomics, volume 3.

Prasangani.K.S.N., (2018*),* Investigation of L2 Motivational self-system: A comparative study of undergraduates from displaced and resettled regions in Srilanka. *Sabaragamuwa university journal*, volume. 16,PP 58-67, doi: https://dx.doi.org/10.4038/suslj.v16il.7719.

Velnampy.T., (2009), *Rewards and employee motivation (A study of private sector organizations in Srilanka).* Research gate, article: December 2009.

Velnampy.T., (2009). *Job satisfaction and employee motivation:* A empirical study of Sri lankan organizations. Research gate, article : January 2009.

Yasoda. V.G.K., Chalika.P.H.A.N., Silva.D.A.S., (2020). Analyzing the motivational factors of homestay entrepreneurs : A case study of Bentota destination site, Srilanka. *SEUSL journal of marketing*, vol.5, No.1, page number 32-40.